**உள்ளூராட்சி விரிவாக்கற் துறை செயற்திட்டம் (புரநெகும) - 2014**

உள்ளூராட்சி விரிவாக்கற் துறை செயற்திட்டத்தின் (புரநெகும) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2790-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

உள்ளூராட்சி விரிவாக்கற் துறை செயற்திட்டத்தின் (புரநெகும) கடன் உடன்படிக்கையின்படி முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்களான தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் அமுலாக்கும். முகவர்களாக உள்ளன. முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மற்றும் நிதிசார் மற்றும் தொழில் நுட்பத்தினால் பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் கணக்குப் பொறுப்பினூடாக வேலைகளின் பயனுறுதிமிக்க விநியோகம் என்பவற்றை எய்துதல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென்று உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2016 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு

மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றம் செயல் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க இணங்கியிருந்தன என்பதும்,

(ஏ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

-------------------

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக நிதியளித்தல் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதிக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு என்பவை தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன |
| ஏடிபீ | 59.00 | 7,670.0 | 10.19 | 1,325.00 | 8.14 | 1,057.55 | 10.97 | 1,425.64 |
| இலங்கை அரசாங்கம் | 9.77 | 1,270.10 | 2.88 | 374.28 | 1.54 | 200.00 | 2.08 | 270.96 |
| மொத்தம் | 68.77 | 8,940.10 | 13.07 | 1,699.28 | 9.68 | 1,257.55 | 13.05 | 1,696.60 |

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஐ.அ.டொலர் 59 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 18.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 10.97 மில்லியன் கடன் பெறுகைகள் மாத்திரமே 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தன. ஆகையால், செயற்திட்டத்தின் எஞ்சியுள்ள 2 ஆண்டு காலப்பகுதியில் கடனின் முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தும் சாத்தியம் கேள்விக்குரியதாக உள்ளது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட தயார்படுத்தும் தொழில் நுட்ப உதவி அறிக்கையின் பொது நிபந்தனையின்படி, நிர்வாக மற்றும் வர்த்தகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் சமூக வசதிகள் முதலியவற்றை முன்னேற்றுவதற்குமாக 171 பிரதேச சபைகள் ஒவ்வொன்றிற்குமாக உயர்ந்த பட்சம் ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு செயற்திட்டம் உடன்பட்டிருந்தது.

மேற்கொள்ளப்பட்ட அந்த உப செயற்திட்டத்தின் 2015 யூன் 30 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

**2015 யூன் 30 இல் உள்ளவாறு**

| மாகாணம் | ஒதுக்கப்பட்ட தொகை | அமுலாக்கப்பட்ட உப செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தியாக்கப்பட வேண்டிய உப செயற்திட்டங்கள் | பூர்த்தியாக்கப்பட்ட உப செயற்திட்டங்கள் | ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | | |
| வட மத்திய | 650 | 24 | 12 | 12 | - |
| மத்திய | 900 | 28 | 18 | 09 | 01 |
| சப்பிரகமுவ | 800 | 25 | 18 | 03 | 04 |
| வடமேல் | 650 | 20 | 14 | 05 | 01 |
| ஊவா | 800 | 28 | 19 | 08 | 01 |
| தென் | 1,100 | 29 | 18 | 06 | 05 |
| மேற்கு | 500 | 17 | 15 | 02 | - |
| | 5,400 | 171 | 114 | 45 | 12 |

32 உப செயற்திட்டங்களின் 2015 யூன் 30 இல் உள்ளவாறான பௌதிக முன்னேற்றம் 10 சதவீதம் தொடக்கம் 50 சதவீதம் வரையான வீச்செல்லையில் மெதுவாக முன்னேற்றமடைந்திருந்த அதே நேரம் 12 வேலைகள் அந்தத் திகதியிலும் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெல்மதுல்ல பிரதேச சபைக்கான பல நோக்கக் கட்டிட நிர்மாணத்திற்கான இடத்தைத் தீர்மானிப்பதற்கு முன்னர் போதிய நில அளவீடோ அல்லது தேசிய கட்டிட ஆராய்ச்சி தாபனத்திடமிருந்தான சான்றிதழோ பெல்முல்ல பிரதேசத்தின் மாணிக்கக் கற்குழிகள் மற்றும் நிலத்தடி சுரங்கங்கள் இருக்கும் ஆபத்திற்கான சாத்தியமிருந்த போதிலும் பெறப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தை நிறைவேற்றும் சமயத்தில் அந்த வேலைத் தளத்தில் மாணிக்க கல் குழி மற்றும் நிலத்தடி சுரங்கம் இருந்தமை.

கண்டுபிடிக்கப்பட்டதால் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டன. இந்தக் காரணத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 9.07 மில்லியன் மற்றும் ரூபா 0.76 மில்லியனான முறையே தயார்படுத்தும் முற்பணம் மற்றும் பகுதிக் கொடுப்பனவுகள் என்பன சிக்கனமற்றதாக கருதப்படுகின்றது.

(ஆ) றெதிமெலியத்த பிரதேச சபைக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கான புதிய அணுகும் வீதியின் நிர்மாணத்திற்காக ரூபா 1.66 மில்லியன் மேலதிகக் கிரயம் செலவிடப்பட்டது. இதன் விளைவாக கட்டிடத்தின் பிரதான வாசல் பிரதான வீதிக்கு எதிர்பக்கத்தை நோக்கியதாக இருந்தது.

(இ) தாதுகெத்தெம்பு – கப்புறல்ல வீதியின் சங்கிலி 0+320 கிலோ மீற்றர் தொடக்கம் 0+375 கிலோ மீற்றர் வரையிலும் சங்கிலி 1 + 330.6 கிலோ மீற்றர் தொடக்கம் 1 + 390 கிலோ மீற்றர் வரையிலுமான 250 மீற்றர் தொடக்கம் 300.6 மீற்றர் வரையான வீச்செல்லையில் பல வெடிப்புக்கள் 2015 ஓகத்து 13 இல் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தல பரிசோதனையில் அவதானிக்கப்பட்டன. இது வீதி வேலைகளிற்காக தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளாது தரங்குறைந்த பொருட்கள் பயன்படுத்தியிருந்தமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 3.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இமடுவ பிரதேச சபையின் 12 வர்த்தக நிலையங்கள், சனசமூக மண்டபம் போன்றவற்றின் மற்றும் ஏனைய வேலைகள் மற்றும் மீள் நிர்மாண வேலைகள் மண்சரிவு ஆபத்துக் காரணமாக 2015 யூனில் கைவிடப்பட்டிருந்ததுடன் அந்த இடம் முறையான நில அளவை இல்லாமல் தெரிவு செய்யப்பட்டிருந்தமை வெளியிடப்பட்டது. அதன் விளைவாக ஒப்பந்தக்காரர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 3.9 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கட்புல நிகழ்ச்சித்திட்டம் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் விளம்பரம் முதலிய நோக்கங்களிற்காகக் செலவிடப்பட்ட ரூபா 2.26 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான கிரயங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளுகடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காததுடன் அதில் ரூபா 2.01 மில்லியன் கடன் பெறுகையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்திட்டத்தின் பிரதி செயற்திட்டப் பணிப்பாளராக இன்னொரு செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராக பதில் கடமையாற்றியிருந்ததுடன் மீளாய்வாண்டின் மூன்று மாத காலத்திற்காக ரூபா 90,000 தொகையான போக்குவரத்துப்படியும் ரூபா 56,520 தொகையான எரிபொருள் படியும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவு தொகையில் கோரிக்கை செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப்பிரமாணம் 371 இன் படி, இன்னொரு முற்பணத்தைப் பெறுவதற்கு முன் முன்னைய முற்பணம் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், செயற்திட்டத்தின் பணிப்பாளர் மற்றும் செயலாளர் முன்னைய முற்பணத்தை தீர்ப்பனவு செய்யாமல் மீளாய்வாண்டில் ரூபா 450,491 மற்றும் ரூபா 425,650 தொகையான முற்பணங்களைப் பெற்றிருந்தனர்.